### பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** (3x6=18)

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

**(அல்லது)**

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. - நிறுவுக.

45. அ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

**(அல்லது)**

ஆ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

46. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

**(அல்லது)**

ஆ) 'கோடைமழை' கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

### பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** (4+2=6)

47. அ) 'விண்வேறு'... எனத் தொடங்கும் கவிஞர் சுரதாவின் பாடல்

ஆ) 'செயல்' என முடியும் குறட்பா.

★★★★★



# முழுப்பாடத் திட்டத் தேர்வு - 1

## பன்னிரண்டாம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

*அறிவுரை: 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா எனபதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.*

### பகுதி - I

*குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.* (14x1=14)

*ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.*

1. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

அ) உரிமைத்தாகம் - 1) பாரசீகக் கவிஞர்
ஆ) அஞ்ஞாடி - 2) பூமணி
இ) ஜலாலுத்தீன் ரூமி - 3) பக்த்வத்சல பாரதி
ஈ) தமிழர் குடும்ப முறை - 4) சாகித்திய அகாதெமி

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

2. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல ...... தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

3. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

4. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
இ) காலநிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு
இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

6. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

அ) தனித்தமிழ்த் தந்தை - 1) மு. வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2) மயிலை சீனி. வேங்கடசாமி
இ) தமிழ்த் தென்றல் - 3) திரு.வி.க.
ஈ) மொழி ஞாயிறு - 4) தேவநேயப் பாவாணர்

7. கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

கூற்று 2 : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 2 சரி, கூற்று 1 தவறு
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

8. மெய்ப் படிமத்திற்குரிய பாடலைத் தேர்வு செய்க.

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு....
ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது....
இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்....
ஈ) வெந்தாறு பொன்னின் அந்திப் பூப்ப.....

9. தமிழில் திணைப்பாகுபாடு .................. அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

10. "ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) முன்னிலைப் பன்மை வினைமுற்று ஆ) வினைத்தொகை
இ) வியங்கோள் வினைமுற்று ஈ) ஏவல் பன்மை வினைமுற்று

11. 'பிறப்பு' எனும் வாய்பாட்டில் அமையாத சீர்

அ) உலகு ஆ) மாண்பு இ) மரபு ஈ) கடுகு

Scanned by CamScanner

12. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.

அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள்.

ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது.

இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்.

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.

13. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

அ) பாலை பாடினான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்

ஆ) பாலைப் பாடினான் - 2) தேரினைப் பார்த்தான்

இ) தேரை பார்த்தான் - 3) பாலினைப் பாடினான்

ஈ) தேரைப் பார்த்தான் - 4) பாலைத் திணை பாடினான்

அ) 4,1,3,2 ஆ) 2,3,1,4 இ) 4,3,1,2 ஈ) 2,4,1,3

14. சிவாஜிகணேசன் நடித்த வரலாற்றுப் படங்களில் இது இல்லை.

அ) சத்ரபதி சிவாஜி ஆ) வீரபாண்டிய கட்டபொம்மன்

இ) தங்கப்பதக்கம் ஈ) ராஜராஜசோழன்

பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3x2=6)

15. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

17. 'விரிபெரு தமிழர் மேன்மை

ஓங்கிடச் செய்வ தொன்றே

உயிர்ப்பணியாகக் கொண்டோன்' - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

18. மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x2=4)

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.

20. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

21. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** (7x2=14)

22. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

23. கலகல, வந்துவந்து, கலகல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.

24. 'தேன்' என்பதை, ஈற்றுச்சீராகக் கொண்டு குறள்வெண்பா எழுதுக.

25. 'ஊர்க்க நின்று விட்டால்

பேச்சும்

அடங்குமா' - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றினை எழுதுக.

26. 'தனியாழி' - பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.

27. 'செய்து' - உறுப்பிலக்கணம் தருக.

28. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

அ) நம்முடைய ................ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

ஆ) உங்களுக்கு ................ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

29. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இருதொடர்களை எழுதுக.

30. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

வண்டலூர்க் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.



பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x4=8)

31. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

32. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

33. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

34. குகனோடு ஐவரானது, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x4=8)

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3x4=12)

39. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

மனமிருந்தால் மார்க்கம் உண்டு

(அல்லது)

வெள்ளம் வருமுன் அணைபோடு

40. தமிழாக்கம் தருக.

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it.

41. சொற்பொருள் பின்வருநிலையணி (அல்லது) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினையும் எழுதுக.

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை' வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

- பாரதிதாசன்

43. எண்ணங்களை எழுத்தாக்கிடுவதற்குக் கீழ்க்காணும் படத்திற்கேற்ப எட்டடி முதல் 10 அடிகள் வரை கவிதை இயற்றுக.



Scanned by CamScanner

### பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** (3x6=18)

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகிய கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு' நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து கட்டுரை வரைக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

### பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** (4•2=6)

47. அ) 'காய்நெல்'... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) "அது" என முடியும் குறட்பா.

★★★★★



# முழுப் பாடத்திட்டத் தேர்வு - 2

## பன்னிரண்டாம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

***அறிவுரை:*** *1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.*

### பகுதி - I

குறிப்பு : *i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.* (14x1=14)

*ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.*

1. கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டம்

அ) மணந்தகம் ஆ) புக்கில் இ) கடிமனை ஈ) குடும்பம்

2. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு

இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

3. உ.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் -

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

4. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க ங இரண்டும் சரி

5. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவையனைத்தும்

6. 'விரியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

7. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ) கணைக்காலிரும் பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

8. இன்றைய நவீன உலகில் ............... என்கிற நோய் அனைவரையும் பீடித்திருக்கிறது.

அ) சோம்பல் ஆ) கோபம் இ) வெறி ஈ) அவசரம்

9. வி.சி. கணேசனுக்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டவர்

அ) பெரியார் ஆ) கலைஞர் இ) அண்ணா ஈ) இளையராஜா

10. மெல்லின எழுத்துகளில் ..................... சொல்லின் தொடக்கமாக வாரா.

அ) ங, ண ஆ) ண, ன இ) ண, ம ஈ) ஞ, ன

11. பொருத்துக.

அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்

ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்

இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்

ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

12. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் ............ படிமம் பயின்று வந்துள்ளது.

அ) வினை ஆ) பயன் இ) மெய் ஈ) உரு

13. ................. கல்வெட்டில் காணப்படும் மூன்று தலைமுறை மன்னர்கள் முறையே பதிற்றுப்பத்தின் 7ஆவது 8ஆவது 9ஆவது பாட்டுடைத் தலைவர்கள்.

அ) கரூவூர் ஆ) மதுரை யானை மலை இ) மாமல்லபுரம் ஈ) புகளூர்

14. படுப்பதூஉம் - இச்சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு

அ) சொல்லிசையளபெடை ஆ) ஒற்றளபெடை

இ) இன்னிசையளபெடை ஈ) இசைநிறை அளபெடை

Scanned by CamScanner

பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3x2=6)

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்குக.
16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
17. 'மூச்சு நின்று விட்டால்
    பேச்சும் அடங்கும்' - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.
18. 'விரிபெரு தமிழர் மேன்மை
    ஓங்கிடச் செய்வ தொன்றே
    உயிர்ப்பணியாகக் கொண்டோன்' - யார், யாரைப் பற்றிக் கூறுகிறார்?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x2=4)

19. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.
20. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
21. 'தி கிரேட் டிக்டேட்டர்' - குறிப்பு வரைக.

பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** (7x2=14)

22. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.
23. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன யாவை?
24. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.
25. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?
26. காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.
27. மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.
    வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
28. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க : புல் , புள்
29. உறுப்பிலக்கணம் தருக : தொழுதனர்
30. தொன்மம் - விளக்கம் தருக

பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x4=8)

31. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.
32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
33. 'வாயிலோயே' எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.
34. எங்கிருந்தோ வருகிறது
    வண்ணத்துப்பூச்சியொன்று
    பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x4=8)

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.



37. பண்டைக் காலத்தில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட நூல்களாகப் பேராசிரியர் அ.கா. பெருமாள் கூறுவன யாவை?
38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3x4=12)

39. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
    எறும்பு ஊரக்கல்லும் தேயும்

    (அல்லது)

    தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
40. தமிழாக்கம் தருக.
    அ) Knowledge of languages is the doorway to wisdom.
    ஆ) Periyar is known as a great champion of the underprivileged.
    இ) Nature's gifts are there for all men rich or poor.
    ஈ) Anounce of practice is worth a thousand words - Gandhi.
41. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
    நஞ்சுஉண்பார் கள்உண் பவர் - இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்குக.

    (அல்லது)

    ஏகதேச உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினையும் எழுதுக.

    பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
    பெருமை வாராதப்பா!
    சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
    செய்கை வேண்டுமப்பா!
    நன்மை செய்பவரே - உலகம்
    நாடும் மேற்குலத்தார்!
    தின்மை செய்பவரே - அண்டித்
    தீண்ட ஒண்ணாதார்!

    - *கவிமணி தேசிய விநாயகம்*

43. எண்ணங்களை எழுத்தாகிடுவதற்குக் கீழ்க்காணும் படத்திற்கேற்ப எட்டடி முதல் 10 அடிகள் வரை கவிதை இயற்றுக.




Scanned by CamScanner

41. 'இயற்கை' என்னும் பொருண்மையில் வெண்பா எழுதுக.

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினையும் எழுதுக.

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன்.

- *நா. காமராசன்*

43. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
யானைக்கும் அடி சறுக்கும்.

**(அல்லது)**

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

### பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** (3x6=18)

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

45. அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்தியதாகக் கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்தெழுதுக.

46. அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

**(அல்லது)**

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

### பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** (4+2=6)

47. அ) "துன்பு உளது".... எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்
ஆ) "புகின்" என முடியும் குறட்பா.

★★★★★



# முழுப் பாடத்திட்டத் தேர்வு - 3

## பன்னிரண்டாம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரை: 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (14x1=14)
ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) தொல்காப்பியம் ஆ) திருக்குறள்
இ) நன்னூல் ஈ) தண்டியலங்காரம்

2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

3. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம் -
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள், ஏற்றுமதியில் முன்னிலை
ஈ) இவையனைத்தும்

4. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

5. 'உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்' - யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சவரி ஈ) இராமன், சுக்ரீவன்

6. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?
அ) வாள் போல் பகைவர் ஆ) தீயினத்தார்
இ) மெய்ப்பொருள் காண்பவர் ஈ) கள்ளுண்பவர்

7. பொருந்தாததைத் தேர்க.
அ) தனித்தமிழ்த் தந்தை - 1) மு. வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2) மயிலை சீனி. வேங்கடசாமி
இ) தமிழ்த்தென்றல் - 3) திரு.வி.க.
ஈ) மொழி ஞாயிறு - 4) தேவநேயப் பாவாணர்

8. 'உரிமைத்தாகம்' சிறுகதையின் முதன்மை கதை மாந்தர்
அ) மூக்கம்மா ஆ) பங்காருசாமி இ) முத்தையா ஈ) வெள்ளைச்சாமி

Scanned by CamScanner

9. அரங்கேற்றம் செய்யும் நாடகக் கணிகையர்க்கு வழங்கப்படும் பரிசு

அ) ஆயிரம் பொற்காசு　　ஆ) ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன்மாலை

இ) ஆயிரத்து எட்டுக் கழஞ்சு முத்து மாலை

ஈ) ஆயிரம் பவுன் பொன் அணிகலன்

10. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ) மயிலைநாதர்　　ஆ) சிவஞான முனிவர்

இ) ஆறுமுகநாவலர்　　ஈ) இளம்பூரணர்

11. 'தலைக்குளம்' சிறுகதை ஆசிரியர்

அ) பாலச்சந்திரன்　　ஆ) மகாதேவன்

இ) தோப்பில் முகம்மது மீரான்　　ஈ) சாந்தா தத்

12. பொருத்தி விடை தேர்க.

| | | |
|---|---|---|
| அ) அவன், அவள், அவர் | - | 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை |
| ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் | - | 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை |
| இ) நாம் முயற்சி செய்வோம் | - | 3) தன்மைப் பன்மைப் பெயர்கள் |
| ஈ) நாங்கள், நாம் | - | 4) பதிலிடு யெர்கள் |

அ) 4, 1 2 3　　ஆ) 2 3 4 1　　இ) 3 4 1 2　　ஈ) 4 3 1 2

13. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

14. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு　　ஆ) பிறந்து　　இ) வளர்ந்த　　ஈ) இடந்தனில்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3x2=6)

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

16. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள் நெறி நின்று விளக்குக.

17. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?

18. முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணம் என்ன?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x2=4)

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** (7x2=14)

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

23. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?



24. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?

25. மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக :

அ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.

ஆ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

விலை, விளை, விழை

27. பாவிகம் - விளக்குக.

28. பேச்சு.வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க : தலைமை

30. இலக்கணக் குறிப்பு தருக. :

அ) அச்சம்　　ஆ) ஆடலும் பாடலும்

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x4=8)

31. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

33. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

34. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள் வழி விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x4=8)

35. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்குக.

36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3x4=12)

39. "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**(அல்லது)**

எடுத்துக்காட்டு உவமையணியை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

40. தமிழாக்கம் செய்க.

i) If you want people to understand you, speak their language.

ii) Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people.

iii) A new language is a new life.

iv) Wangarai Mathai was elected to the Parliament and made a Minister of environment.

Scanned by CamScanner

41. சினம் என்னும் சேர்நதாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும். - இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

(அல்லது)

சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினையும் எழுதுக.

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

- *பாரதிதாசன்*

43. 'சொல்லோவியங்கள்' (கவிதை) என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.

## பகுதி - IV

**கீழ்க்காணும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** (3x6=18)

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. - நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) நிருவாக மேலாண்மையை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

(அல்லது)

ஆ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** (4+2=6)

47. அ) 'குழல்வழி'.... எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்
ஆ) 'பொருள்' என முடியும் குறள்.

★★★★★



# முழுப் பாடத்திட்டத் தேர்வு - 4

## பன்னிரண்டாம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரை: 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு : *i)* அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (14x1=14)
*ii)* கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பொருத்துக.

அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

2. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

3. ஆராய்ந்து சொல்கிறவர்
அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர்
இ) தூதுவர் ஈ) உறவினர்

4. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) [redacted]ன்னூல்

5. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

6. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

7. வளர்தலம், செற்றவர் - என்பனவற்றின் இலக்கணக் குறிப்பு முறையே
அ) வினைத்தொகை, வினையாலணையும் பெயர்
ஆ) உவமைத் தொகை, தொழிற்பெயர்
இ) உம்மைத்தொகை, வினைமுற்று
ஈ) வினையாலணையும் பெயர், தொழிற்பெயர்

8. 2014 - இல் சாகித்திய அகாதெமியின் விருது பெற்ற பூமணியின் புதினம்
அ) அஞ்ஞாடி ஆ) கருவேலம்பூக்கள் இ) உரிமைத்தாகம் ஈ) வெக்கை

Scanned by CamScanner

9. 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' - என்ற விதிப்படி புணரும் சொல்
அ) கண்ணிடை ஆ) பூங்கோதை இ) பெருந்தோள் ஈ) தலைக்கோல்

10. பல் + நூல் = ..................... என மாறும்.
அ) பல்நூல் ஆ) பலநூல் இ) பன்நூல் ஈ) பன்னூல்

11. 'பாவிகம் என்பது காப்பியப் பண்பே' - என்று கூறும் நூல்
அ) முத்து வீரியம் ஆ) தொல்காப்பியம் இ) யாப்பிலக்கணம் ஈ) தண்டியலங்காரம்

12. வெளியுலகம் அறியாமல் வாழ்வதைக் குறிக்கும் உவமைத் தொடர்
அ) கிணற்றுத் தவளை போல ஆ) எலியும் பூனையும் போல
இ) அச்சாணி இல்லாத தேர்போல ஈ) தாமரை இலை நீர் போல

13. Metro Train - என்பதன் கலைச்சொல்
அ) தொடர்வண்டி வழிக்குறி ஆ) மாநகரத் தொடர்வண்டி
இ) இருப்புப்பாதையைக் கடக்குமிடம் ஈ) மின் இருப்புப்பாதை

14. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க.
அ) கர்ணன் தோற்றான் போ ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!
இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ) இந்தா போறான் தருமன்

### பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

#### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3x2=6)

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
16. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

#### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x2=4)

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. 'விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டேன்' - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

#### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** (7x2=14)

22. பொருள் வேறுபாடறிந்து சொற்றொடர் அமைக்க.
அ) கிளி - கிலி (அல்லது) என்றாள் - என்றால்

23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.
ஆ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.



25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.
ஆ) புள்ளைக்கு ஒடம்பு சரியில்லை மூணுநாளா சிரமப்படுது.

26. மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.
ஆணி அடித்தாற் போல

27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) கொள்வர் ஆ) ஓங்கி

28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) உள்ளொன்று ஆ) மனத்திட்பம்

29. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.
வாழைக்காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.

30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
பலகை

### பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

#### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x4=8)

31. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்
செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!" - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.
32. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள் வழி விளக்குக.
33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
34. "எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக் கூடும் நாளை" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

#### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2x4=8)

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

#### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3x4=12)

39. 'யானைக்கும் அடிசறுக்கும்' என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
40. தமிழாக்கம் தருக.

I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them wishing them, well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life. I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

Scanned by CamScanner

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினையும் எழுதுக.

வெட்டியடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

– பாரதியார்

43. படத்தினைப் பார்த்து உங்கள் எண்ணங்களை எழுத்தாக்குக.



## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:** (3x6=18)

44. அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்தகோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்துப்படுகின்றன?

45. அ) மயிலையார் "ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரையாக்குக.

*(அல்லது)*

ஆ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ......... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

*(அல்லது)*

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணை புரிகிறது – விளக்குக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** (4+2=6)

47. அ) 'குகனோடும்' ... எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

ஆ) 'மிகும்' என முடியும் குறள்.

♦♦♦♦♦



# முழுப்பாடத்திட்டத் தேர்வு – 5

**பன்னிரண்டாம் வகுப்பு**

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

*அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*
*2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.*

## பகுதி - I

**குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**
**(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** (14x1=14)

1. 'உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்' – யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

2. பங்குனி உத்திர விழாவினைக் குறிப்பது
அ) கலிவிழா ஆ) பலிவிழா இ) ஒலிவிழா ஈ) மலிவிழா

3. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக் கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

4. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

5. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் – இத்தொடர் உணர்த்துவது
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாட்டே தேவையாகிறது ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
இ) காலநிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

6. வறியவன் ஒருவன் தன் சிறு வயலைப் பாதுகாப்பது போல, ஆட்சி செய்தவன் எனக் கம்பர் குறிப்பிடுபவர்
அ) இராவணன் ஆ) தசரதன் இ) இராமன் ஈ) சுக்ரீவன்

7. வெண்பாவை .................. என்றும் அழைப்பர்.
அ) வஞ்சிப்பா ஆ) கலிப்பா இ) வன்பா ஈ) மென்பா

8. 'சாபவிமோசனம்' 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்
இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்

9. உருவகம், பண்புத்தொகை – முறையே பயின்று வரும் சொற்கள்
அ) ஏமப்புணை, தொல்நெறி ஆ) உலகு, மறத்தல்
இ) வெண்மதி, நல்லபுலவர்கள் ஈ) மலரடி, வளர்தலம்

10. "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" என்ற விதிப்படி புணராதது
அ) தலைக்கோல் ஆ) அடித்தளம் இ) தீக்காய்வார் ஈ) அருஞ்சேகரம்

11. தம்முடைய வட்டார எழுத்திற்கு 'கரிசல் இலக்கியம்' என்று பெயரிட்டவர்
அ) புதுமைப்பித்தன் ஆ) ஜெயகாந்தன் இ) தி. ஜானகிராமன் ஈ) கி. ராஜநாராயணன்

Scanned by CamScanner

12. Subscription – என்பதன் கலைச்சொல்

அ) கையெழுத்துப்பிரதி ஆ) நூல்நிரல் இ) உறுப்பினர் கட்டணம் ஈ) புனைவு

13. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

14. அ) பாம்போடு உடன் உறைந்தற்று – 1. தீக்காய்வார்

ஆ) செத்தார் – 2. சீர் அழிக்கும் சூது

இ) வறுமை தருவது – 3. கள் உண்பவர்

ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் – 4. உடம்பாடு இலாதவர்

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 1, 3, 2 ஈ) 4, 3, 2, 1

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக:**

**பிரிவு – 1**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** (3x2=6)

15. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.
16. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினார்?
17. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
18. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** (2x2=4)

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியத்தின் கருத்தைக் குறிப்பிடுக.
20. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
21. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

**பிரிவு – 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** (7x2=14)

22. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*

அ) இப்ப எனக்குப் புரிஞ்சுப் போச்சி. நீயும் புரிஞ்சிக்கோ.

ஆ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.

23. *பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.*

அ) வலம் – வளம் ஆ) உழை – உளை

24. *தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.*

அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

ஆ) பனைமட்டையால் கூரை வைத்திருந்தனர்.

25. *விடைக்கேற்ற வினா அமைத்தல்.*

அ) குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில் தான் இடம் பெற்றுள்ளது.

ஆ) 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

26. *உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.*

தாமரை இலை நீர் போல

27. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?



28. *தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.*

அ) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

ஆ) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

29. *பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.*

அ) அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.

ஆ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.

30. *கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இரு வேறு தொடரமைக்க.*

அ) தானே ஆ) கொண்டு

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக:**

**பிரிவு – 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** (2x4=8)

31. 'மூன்றான காலம் போல் ஒன்று' – எவை ஏன்? விளக்குக.
32. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
33. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.
34. "ஈசன் மகள் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்"

– இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** (2x4=8)

35. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – எவ்வாறு?
36. சென்னை பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
37. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.
38. நிருவாக மேலாண்மையைக் குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**பிரிவு – 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** (3x4=12)

39. பொருள் வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

*(அல்லது)*

பரிசில் துறையைச் சான்று காட்டி விளக்குக.

40. மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சியாக அனுமதி தர வேண்டி, உங்கள் பள்ளி தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதுக.
41. தமிழாக்கம் தருக.

1. A new language is a new life.
2. The limits of my language are the limits of my world.
3. Knowledge of languages is the doorway to wisdom.
4. Learning is a treasure that will follow its owner everywhere.

Scanned by CamScanner